**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலைப் பீடம்**

**முதலாம் வருடக் கலைமாணிப் பரீட்சை**

**இரண்டாம் அரையாண்டு - 2016/2017**

**SOC 1202 உளவியல் தத்துவங்கள்**

**இரண்டு (02)மணித்தியாலங்கள்.**

**நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

**ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.**

---

1. அமைப்பியல்வாதம் மற்றும் தொழிற்பாட்டுவாதம் என்பவற்றில் மனதின் முக்கியத்துவத்தினை விளக்குக.

2. உளவியலில் பயன்படுத்தப்படுகின்ற வேறுபட்ட ஆய்வுமுறைகளைச் சுருக்கமாக விளக்கி, அவற்றில் ஒன்றினைப்பற்றி உதாரணங்களுடன் விளக்குக.

3. ஒன்றில்

   நரம்புத்தொகுதியின் கட்டமைப்பினைச் சுருக்கமாக விளக்கி அதன் செயற்பாடுகளை விளக்குக.

   அல்லது

   மனித நிலைப்பிற்கு உந்துதல் எவ்வாறு துணைபுரிகின்றது? மஸ்லோவின் உளவியல் கோட்பாட்டுடன் தொடர்புபடுத்திச் சுருக்கமாக விளக்குக.

4. நீங்கள் இரவினில் தனிமையாக இருக்கின்றீர்கள். மின்னலும் இடியுமாக இருக்கின்றது. சடுதியாக மின்சாரம் நின்றுவிடவும் யாரோ ஒருவர் உங்கள் கதவினைத் திறப்பதற்கு முயற்சிப்பதாக நீங்கள் அறிகின்றீர்கள். இச்சூழலை ஜேம்ஸ் - லாங் மற்றும் கனன் - பாட் கோட்பாடுகளோடு தொடர்புபடுத்தி நீர் எவ்வாறு கருத்துரைப்பீர்?

5. ‘சூழலோடு கொண்டுள்ள தொடர்புகளின்வழி சார்பளவில் நிலையாக ஏற்படும் மாற்றமே கற்றல்’ என வரையறை செய்யப்படுகின்றது. பழைமை நிபந்தனைப்படுத்துதல் பரிசோதனையுடன் தொடர்புபடுத்தி இக்கூற்றினை விளக்குக.

ம. ப. பா.

6. உளச் - சமூகப் படிநிலைகளோடு தொடர்புபடுத்தி புரொய்டின் ஆளுமைக் கோட்பாட்டினை விளக்குக.

7. புலனுணர்வு அமைப்பின் செயற்பாடுகளை உதாரணங்களுடன் விளக்குக.

8. ஞாபகத்தினைப் போன்றே மறதியும் மனிதர்களின் நலமான வாழ்வுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இக்கூற்றினை விமர்சனரீதியாகப் பரசீலிக்குக.